எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

7 JUL 1967

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 10 கற்பனை 7] திருச்சி 15—7—67 [தனிப் பிரதி 25 காசு

சிந்தனைக்கு.....

மகா சங்கல்பத்தின் வரிவடிவமே இந்தப் படைப்பு. இதன் தன்மையை உற்றுப் பார்த்தால் அதனூடே சத்தியம் இணைத்திருப்பது தெரிகிறது. சத்தியத்தைக் காணும்போது வியப்பு ஏற்படுகிறது. வியப்பிலிருந்து எண்ணம் பிறக்கிறது. எண்ணத்திலிருந்து ஒரு தவிப்பு ஏற்படுகிறது. தவிப்பிலிருந்து எதையோ அறிந்துவிடவேண்டுமென்ற துடிப்பு ஏற்படுகிறது. துடிப்பு ஏற்பட்டதும் சிந்தனை மலருகிறது. சிந்திக்கத் தொடங்கும்போது, உண்மையை உணராதபோது துன்பம் தெரிகிறது. உண்மையை உணர்ந்துவிட்டால் உணர்வு நெகிழ்ந்து இன்பம் மலர்கிறது. இந்த இன்பமே இலக்கியம். சத்தியத்தின் சேவகனாக எழுத்தும், சத்தியத்தின் சாயலாக இலக்கியமும் இருந்து மக்களை வாழ்விக்கிறது.

உண்ணும் உணவு ஜீரணமானால் உடலுக்குப் பலம். உணவின் சக்தி உடலின் சேமிப்பாகி உடலை வளர்க்கிறது. படிக்கின்ற படிப்பு ஜீரணமானால் அறிவுக்குப் பலம். படித்தபடி நடப்பதே அறிவுக்குப் பலம் தருவதாகும். சத்திய வழியில் நடப்பது வாழ்க்கை ஜீரணமாவதற்கு வழி. சத்திய வழி நடந்தால் இறை தத்துவம் உள்ளத்திற்குப் புலனாகும். அனைத்து உயிரும், தன் உயிரும் ஒன்றே என்று தெரியும். இதற்கெல்லாம் மேலாக ஒழுக்க முடைமையே இப்பிறவிக்கு சேமிப்பாகி, வாழ்க்கையை வாழ்க்கையாக மலரச் செய்யும். ஒழுக்கமில்லாத வாழ்வு, சேமிப்பு இல்லாத வியாபாரம் போன்றது. சேமிப்பு இல்லாத வியாபாரம் வியாபாரம் இல்லை. ஒழுக்கமில்லாத வாழ்வு வாழ்வும் இல்லை,

ரெட்டியார்.

கவிதை பிறந்த கதை

—[கவிஞர் எஸ். வி. துரைசாமி, எம். ஏ.]—

★

மாலை மதியம் வானத்திலே தன் முழு வொளியையும் இன்னும் பரப்பவில்லை. இரவு நங்கை அப்போதுதான் இம்மண்ணுலகை ஆட்சி செய்யப் பவனிவர ஆரம்பித்திருக்கிறாள். இருள் சிறிது சிறிதாக உலகைக் கவ்வ வருகிறது. மக்கள், தெருவில் பழுது கிடப்பதைப் பாம்பென்று மருண்டு ஒதுங்குகிறார்கள். காவிரிப்பெண்ணின் அரவணைப்பில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில் சாயங்காலப் பூசைக்குரிய மணியோசை கேட்கிறது.

நன்றுடையானை வணங்கித் திருநீறு பெற்றுப் பூசிக்கொண்டு ‘சிவ சிவ’ என்ற முணுமுணுப்போடு ஓர் உருவம் மெதுவாக வலம் வருகிறது. மும்முறை வலம் வந்த பிறகு, “சிரகிரி விளங்க வந்த தட்சிணாமூர்த்தி” யினருகில் பதுமாசனம் இட்டு அமர்ந்தது. அவ்வுருவம் வேறு யாருமல்ல. அரசாங்கத்தின் தலைமைக் கணக்கராக நிதியமைச்சராக, வேலைபார்த்து வரும் தாயுமான அடிகளே அவ்வுருவம்.

தொன்றுதொட்ட வரலாற்றுச் சிறப்பும் புராணச்சிறப்புங்கொண்ட அம்மலைக் கோயிலில் படியேறிச் சென்று பரமனை வழிபட்டவர்கள் திரிசிரஸ், அகத்தியர், சாரமா முனிவர் முதல் பலராவர். பல்லவ மன்னர்களும், சோழ பாண்டியர்களும் திருப்பணி புரிந்து பரமனைப் பணிந்தார்கள். அன்றுதொட்டு இன்றுவரை ஆயிரமாயிரமாக மக்கள் கூட்டம் படியேறி வந்து இறைவனருள் பெற்றவண்ணமிருக்கிறார்கள்.

அன்றையதினம் இரண்டுபேர் வெளியூரிலிருந்து ஆண்டவனைத் தரிசிக்க ஆவலாக வந்துகொண்டிருந்தனர். மேல்மூச்சு வாங்கவும் உடலெல்லாம் வியர்வை வழியவும் படியேறி வந்த அவ்விருவரில் ஒருவர் மதுரையார் என்றும், மற்றொருவர் திருக்காளத்தியாரென்றும் அவர்களின் உரையாடலிலிருந்து தெரிய வந்தது. அவர்கள் தாயுமான அடிகள் வீற்றிருக்கும் இடத்தினருகாகப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்போதுதான் தியான நிலையிலிருந்து மீண்ட தாயுமான அடிகள் அவர்கள் உரையாடலைச் சற்றே செவிமடுத்தார். மதுரைக்காரர் சொன்னார், “என்ன இருந்தாலும் எங்கள் மதுரையிலுள்ள பெருமானுக்கும் மீனாட்சிக்கும் இணையாக எந்தத் தெய்வத்தையும் சொல்ல முடியாது! ஏனெனில் எங்கள் சோமசுந்தரப் பெருமான் அடியார்க்காகவும், தமிழுக்காகவும் அறுபத்திநான்கு திருவிளையாடல்கள் செய்துள்ளார்!” என்றார். அது கேட்ட காளத்தியார், “அதென்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? எங்கள் காளத்திநாதருக்கு இணையாக எந்த மூர்த்தியைச் சொல்ல முடியும்? ஒன்றுக்குமுதவாத வேடனுக்கு ஆறே நாளில் அருள் செய்த ஒரு செயலுக்கு, அறுபத்திநாலு என்ன அறுபதினாயிரம் திருவிளையாடல்கூட ஈடாகாதே!” என்று ஆவேசமாகப் பேசினார்.

இவர்கள் பேச்சினைச் செவி மடுத்தார் தாயுமான அடிகள். ஆண்டவனின் அருள் வெள்ளத்தில் திளைத்திருந்த அவருள்ளம் இம்மனிதர்களின் அறியாமை நிறைந்த உரையாடலைக் கேட்டு வருந்தியது. “என்ன அறியாமை! இவர்கள் படித்தவர்களா! அல்லது கற்றும் அறிவில்லாதவர்களா! பரம்பொருளாகிய இறைவன் இல்லாத இடமும் உண்டோ? “பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனை இவர்கள், எங்களூரில்தான் இருக்கிறான், உங்களூரில்தான் இருக்கிறான் என்று பிதற்றுகிறார்களே! அந்த மூர்த்தி உயர்வாம்! இந்த மூர்த்தி தாழ்வாம்! இவர்கள் கடவுளில்லை என்கிற நிரீசுவர வாதிகளாயிருந்தாலாவது ஒருவாறு பொருந்தும். திருநீறும் உருத்திராக்கமும் தரித்த சைவசமய வாதிகளாகக் காணப்படுகிறார்கள்!......”

இப்படியெல்லாம் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டே தாயுமானவர் மெதுவாக எழுந்து தாயான செல்வர் சந்நிதி முன்பு போய் நின்றார். ஆண்டவனின் அருவுருத் திருமேனியை நோக்கினார். கண்களினின்றும் வெள்ளமாக கண்ணீர் பெருகி வழிந்தது. சிறிது நேரத்தில் அவருடைய அமுதமூறும் வாய் மலர்ந்து கவிதைத்தேன் புறப்பட்டது!

“அங்கு இங்கு எனாதபடி எங்கும்
பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது?...”

கவிதை தடைபட்டது. காரணம் அந்த நேரத்தில் மக்கள் கூட்டம் திடுதிடுவென்று இரைச்சலோடு உள்ளே நுழைந்தது. சிவாச்சாரியார், அருச்சனையும், தீபாராதனையும் செய்து எல்லோருக்கும் பிரசாதம் வழங்க ஆரம்பித்தார். எனவே தாயுமான அடிகள் அவ்விடத்தை விட்டுக் கிளம்பிச் சுற்றிவந்து கொடிமரத்தினடியில் விழுந்து வணங்கிய பிறகு, நேராகப் படியேறி உச்சிப் பிள்ளையார் சந்நிக்குப் போய்ச் சேர்ந்தார். மும்முறை வலம் வந்து வணங்கியபின் தென்றிசைப் பக்கம் நோக்கினார். திருச்சிராப்பள்ளி நகரம் முழுதும் தாயுமானவன் வீற்றிருக்கும் மலையைச்சார்ந்து கிடப்பதைக் கண்ணுற்றார். பெரும் பெரும் மாளிகைகள் எல்லாம், சின்னஞ் சிறிய குழந்தைகள் வீதியில் கட்டி விளையாடும் சிறுவீடுகளாக் காட்சியளித்தன! “இம்மாபெரும் நகரமே இம்மலைக் கோயிலைச் சார்ந்து இறையருளில் ஒன்றி நிற்கிறது! மாந்தரின் ஊனக்கண்ணிற்குப் புலனாகும் வகையில் இந்த ஒரு காட்சி நமக்கு இறையியல்பைப் புலப்படுத்துகிற தென்றால், பலகோடியண்டங்களும் அப்பெருமானுடைய அருளையே சார்ந்திருக்கின்றன என்பதில் ஐயமும் உண்டோ?” என்றவாறு அடிகளின் சிந்தனை ஓடிற்று. முன்பு இறைவன் சந்நிதியில் தொடங்கிய கவிதையை இப்போது மேலும் தொடர்ந்து பாட ஆரம்பித்தார்:

தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க்
குயிராய்த் தழைத்ததெது?......”

அந்த நேரத்தில் அங்கே வந்த சிலர் போட்ட கூச்சல் தாயுமானாருடைய கவிதையோட்டத்தைத் தடை செய்து விட்டது. உச்சிமலையேறி வேடிக்கை பார்ப்பதற்கென்றே வந்தவர்கள் அவர்கள்

கடைசிப் பக்கம் பார்க்க

எழுத்தாளன்

கனவு 10] பிலவங்க, ஆடி 15-7-67 [கற்பனை 7

சாஸ்திரமும் - சட்டமும்

தமிழர்களுடைய தொன்மரபை விளக்க இலக்கியங்களும், சாஸ்திர, ஸ்தோத்திரங்களும் இருக்கின்றன. தமிழர் பண்டைக் காலம் தொட்டே, பண்பும், பரிவும், அன்பும் கொண்டு, வீரமும் தர்மமும் குன்றாது சிறந்து விளங்கி வந்தார்கள் என்பதற்கு சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. சமுதாய கட்டுக்கோப்புக்கு தமிழர்களுக்கு சட்டமாக எது இருந்தது? குற்றவாளிகளை எந்த அடிப்படையில் தண்டித்தார்கள்? அன்றைய மனிதன் தான் குற்றவாளி அல்ல என்பதற்கு எதை ஆதாரமாகக் காட்டி விடுதலைபெற்றான்?

தமிழச் சாதிக்கு என்று சமுதாயக் குற்றவாளிகளை தண்டிக்க சட்டம் என்று ஒன்று இருந்ததா? என்று அறிஞர்கள் சிந்திக்கவேண்டும். வெள்ளைக்காரன் ஆண்டபொழுது இந்து லா, கிரிமினல் லா, சிவில் லா என்ற சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வப்போது அவைகளுக்கு வேண்டிய திருத்தங்களும், சேர்க்கைகளும் உருவாக்கப்பட்டன. இந்த சட்டங்களின் நியதிக்கு உட்பட்டு நீதிமன்றங்கள் தீர்ப்புகள் வழங்கி வந்தன.

சுதந்திரம் பெற்ற பிறகு சென்ற இருபது வருட காலத்தில் மத்திய சட்டசபையும், ராஜ்ய சட்டசபைகளும் தங்களுக்கு முடிந்தமட்டில் புதிய புதிய சட்டங்கள் தோன்றும் போதெல்லாம், மனித ஜாதி தனது தன்மையை இழந்து நிற்கிறது என்பதுதான் பொருள்.

நாகரிகம் வளர வளர, மனிதன், மனிதத்தன்மைகளிலிருந்து தாழ்ந்துபோகிறான் என்பதுதானே பொருள்? "பூட்டு" என்று ஒரு பொருள் கண்டு பிடிக்கப்பட்டபோதே, திருடனும் உதயமாகிவிட்டான். நாகரிகத்தின் விளைவால் மனிதன் வெளிப்பார்வைக்கு மனிதனாகத் தோன்றினாலும் உள்ளத்தில் அவன் மனிதனாக வளரவில்லை, வாழவில்லை என்பதை, புதிய புதிய சட்டங்களை நாம் உருவாக்குவதிலிருந்தே தெரிகிறது.

கட்டு என்பதை வெட்டு என நினைக்கும் மனித மனம் சட்டம் என்று ஒன்று உருவாக்கும்போதே சட்டத்தின் பார்வையிலிருந்து எப்படி எப்படி தப்பலாம் என்றுதான் நினைக்கிறது என்பது தெரிகிறது. சட்டம் இழுத்த இழுப்பிற்கு வளைந்து கொடுப்பதாக சொல்லப்பட்டாலும் அதனை இழுத்து வளைக்கும் ஆற்றல் கொண்ட வல்லவர்கள் புகழ் பெற்றவர்களாகவும் விளங்கிவருகிறார்கள்.

இப்பொழுதுள்ள நிலையில் புதிய புதிய சட்டங்களும், மசோதாக்களும் வருடாவருடம் நிறைவேற்றியும், குற்றவாளிகள் பெருகி வருவதும் அந்த சட்டங்களின் பிடிகளிலிருந்து அவர்கள் தப்புகின்ற முயற்சிகளும், தினசரி நீதிஸ்தலங்களில் காண்கிறோம்.

சமுதாய விரோதிகள் மக்களுடன் வாழ்ந்து கொண்டே சமுதாயத்தின் அடிப்படைகளை தகர்த்து மக்கள் மனத்தில் பீதியும் அச்சமும் ஏற்பட்டு திசை மாறிப் போகும்படி செய்துவருகிறார்கள். எத்தனை போலீஸ் அதிகாரிகள் இருந்தாலும், நீதிஸ்தலங்கள் இருந்தாலும் குற்றவாளிகள் தப்பிவிடுகிறார்கள். சில சமயம் குற்றம் செய்யாதவர்கள் சந்தர்ப்பவசத்தால் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டும் விடுகிறார்கள்.

மனித சமுதாயம் இனி திருந்துவதற்கு வழியே இல்லையா? ஒருவனை ஒருவன் பகைக்காமல் இனி வாழ முடியாதா? தன்னைத் தான் திருத்திக்கொள்ளாத வரையில் மனித சமுதாயம் திருந்துவதற்கு, நேர் வழி செல்வதற்கு, சட்டத்தை மதித்து நடப்பதற்கு வழியில்லை என்றுதான் படுகிறது.

தன்னைத்தான் திருத்திக்கொள்ள தனக்குத்தானே ஒரு நீதிபதியாக இருந்து தண்டனை கொடுத்துக்கொள்ள வேண்டுமானால், மனிதன் மனதில் தெய்வ நம்பிக்கையை மக்கள் மனதில் ஏற்படுத்தித்தான் பண்பாட்டை உருவாக்கியிருக்கிறார்கள். தெய்வ நம்பிக்கையை வளர்த்தவர்களை பத்தாம் பசலி என்று பேசும் அளவிற்குப் பகுத்தறிவு வாதம் பேசும் சுயநலமிகளால் தான் குற்றங்கள் நாட்டில் பெருகிவருகின்றன என்று கூறுவதில் தவறு இல்லை.

நம் முன்னவர்கள் சாஸ்திரங்களையும், ஸ்தோத்திரங்களையுமே சட்டம்போல மதித்தார்கள். சிறந்த வாழ்வு வாழ்ந்தார்கள். இன்று நம்மில் பலர் சாஸ்திரங்களையும் மதிப்பதில்லை; சட்டங்களையும் மதிப்பதில்லை.

சாஸ்திர விதிகளில் சுயநலமிகளின் கைவரிசை சிறிது நப்பாசையால் இடைக்காலத்தில் புகுத்தப்பட்டிருக்கலாம். அதனை காலத்திற்கு ஏற்றபடி மாற்றும் வலிமை படைத்த அறிஞர்கள் நம்மிடம் இல்லையா?

தெய்வ நம்பிக்கை ஒன்றுதான் மனிதனை நேர்வழி நடத்தும். தெய்வக் கொள்கைகளை நிலைநாட்டவே கோவில்களும், பதிகங்களும், பாடல்களும் ஏற்பட்டன. அதுவே தமிழின் சிறப்பும், தமிழன் சிறப்புமாக விளங்குகிறது.

தெய்வம், தவறு செய்தால் கெடுத்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டபோது மனிதன் தன் எண்ணத்திற்குப் பயந்தான். அடுத்த நிலை, அரசு, தவறு செய்தால் தண்டிக்கும் என்றபோது உடல் உபாதைகளுக்குப் பயந்தான். இன்று உள்ளமும் உடலும் வேதனைப்பட்டாலும், நாலு பேர் மதிக்க நாகரிக வாழ்வு வாழ்ந்தால் போதும் என்று நினைப்பவனை சட்டத்தால் திருத்தமுடியுமா? தமிழ்ச் சமுதாயமே இதனை சிந்தித்துப் பார். இதற்கு ஒருவழி கண்டுபிடிக்க தக்கவர்களை எங்களுக்குத் தா என்பதுதான் எழுத்தாளன் பிரார்த்தனை.

ரேடியோ நாடகம்

"ஆண்டியின் இதயம்"

[எம். எஸ். கோபால்]

ரேடியோவுக்கு நாடகம் எழுதுவது தனிக்கலை. குரல் மட்டுமே மூலதனமாக வைத்து நடிக்கப்படுவது ரேடியோ நாடகம். நீண்ட வசனங்கள், ரேடியோ நாடகத்திற்குப் பயன்படாது. மேடை நாடகத்தில் காட்சி மாற்றத்திற்கு சீன் மாற்றம் காட்டுவதுபோல, ரேடியோ நாடகத்தில் காட்சி மாற்றத்திற்கு ஒலிக்குறிப்புகள் பயன்படுத்தப்பட வேண்டும். ரேடியோவுக்கு நாடகம் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்று நண்பர் பலர் கடிதம் எழுதி கேட்டு வருகிறார்கள். அவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதற்காக, நான் மகிழ்ந்து, ரசித்துப் பாராட்டிய இந்த ரேடியோ நாடகத்தை நிலையத்தாரிடம் கேட்டு வாங்கி மகிழ்வுடன் இங்கு பிரசுரித்திருக்கிறேன். புதிதாக ரேடியோ நாடகம் எழுதவிருக்கும் நண்பர்களுக்கும், பற்பல ரேடியோ நாடகங்கள் எழுதி அனுபவம் பெற்றவர்களுக்கும்கூட இந்நாடகம் வழிகாட்டியாக அமைகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்.

பாத்திரங்கள் : பழநி ஆண்டி
பரமானந்தர்
சிவநேசர்
மகாலக்ஷ்மி
மிராசுதார்—மகாலட்சுமியின் தந்தை

ஒலிக்குறிப்புகள் : உதய கீதம் (வயலின் இசை)
ஓடும் ரயில் சப்தம்
ரயில் நிற்கும் சப்தம்
தூரத்தில் ஒலிக்கும் கோயில் மணி
நாய்கள் சண்டை
குழந்தையின் அலறல்

பர : சாமி எங்கிருந்து வருது? ஊருக்குப் புதுசா?

பழ : புதுசும் பழசும் ஆண்டிகளுக்கேது—

பர : எந்த ஊரிலேயிருந்து சாமி புறப்பட்டு வருது

பழ : காட்டூர்

சின் : என்ன பட்டினியா

பழ : ஆண்டிகளுக்கு ஏற்பட்டது

சிவ : அதே நிலைமைதான் இங்கே. பேரென்னவோ பேரூர். சாப்பாட்டுக்கு இது போரூர்.

பழ : நம்ம பிழைப்பே ஒரு போர். ஆண்டிகளுக்கு எந்த ஊரும் சொந்தமில்லை. கடவுள் கொடுத்த காலிருக்கு. எங்கும் போக உரிமை இருக்கு. எல்லா ஊரும் நமக்கு சொந்தம்.

சிவ : சாமி ரொம்ப தேர்ந்த கட்டையாயிருக்கே - சாமி திருநாமம்—

பழ : பழநி ஆண்டி

சிவ : குடும்பத்தொல்லையா - கடன் தொல்லையா—

பழ : இரண்டுமில்லை - குடும்பத்துக்கே முருகனருள்—

சிவ : பரம்பரையே

பழ : ஆண்டிகள்

சிவ : அதுதான் பழுத்த அநுபவமிருக்கு

பழ : ஆண்டிகளுக்கு என்ன குறைச்சல் அநுபவத்துக்கு — ஒரு ஊரா ஒரு இடமா

சிவ : சுற்றுப்பிரயாணம் போலிருக்கு

பழ : தென் பகுதியிலே கால் படாத இடமில்லை இருக்கிற நிலைமையிலே வடக்கே போகவும் யோசனை இந்த ஊர் ஜனங்கள் எப்படி

சிவ : ரொம்ப நல்லவங்க ஆனால் கிட்ட நெருங்கினா நெருப்பு

பழ : ரொம்ப கஷ்டம்னு சொல்லுங்க

பர : கஷ்டம் இல்லாம பிழைக்க வழி ஏது

சிவ : இருக்கு ரொம்ப நாளா யோசனை செய்த திட்டம் தயாராயிருக்கு

பழ : திட்டமா

சிவ : ஆமாம் பிச்சைக்காரர்களை உருவாக்கும் திட்டம்

பழ ; ஒழிக்கும் திட்டம்

சிவ : பரமானந்தரே நீர் எதிலும் நம்பிக்கை இல்லாதவர். காலத்துக்கேற்ற திட்டம் போட்டு வேலை செய்தால்தான் வெற்றி

பர : சாமி உங்க திட்டத்தை அப்புறம் பார்க்கலாம் இப்போ இருக்கிற வயித்துப்பசியைத் தீர்க்கிற திட்டத்தைப் பாருங்க

சிவ : இந்த வயிறுன்னு ஒண்ணு இல்லேன்னா உலகத்திலே உணவுப் பிரச்சினையே இருக்காது

பழ : கடவுள் ஏன் இந்த வயிற்றைப் படைச்சு பசிங்கிற உணர்வையும் படைச்சாரோ தெரியவில்லை

பர : நம்மைப்போல ஏழைகளெல்லாம் கஷ்டப்படுறதுக்குத்தான் வேறெ எதுக்கு? பசிதாங்க முடியலே சாமி பேச்சை நிறுத்துங்க பையிலிருப்பதை கையில் எடுங்க

[காலை இசை—பூபாளம் ராகம்—வயலின் ஒலித்து நிற்கிறது.]

பழ : ஐயா தர்மப்பிரபு சாமி தருமதுரை

குர : யாருடா அவன் காலங்காத்தாலே வந்து கழுத்தறுக்கிறான் தூங்கவிடாம

பழ : ஐயா பிச்சைக்காரன்

குர : பிச்சைக்காரனா எவண்டா நல்லா விடியறதுக்கு முந்தி பிச்சைக்கு வந்துட்டான் உங்களுக்கு எல்லாம் வேறே வேலை கிடையாதா

பழ : கிடைச்சா ஏஞ்சாமி பிச்சை எடுக்கிறோம்.

குர : கிடைச்சா வேலை செய்யணுமே இது கஷ்டமில்லாத பிழைப்பு பாரு

பழ : அப்படி இல்லே சாமி அலைஞ்சு பார்த்தா தெரியும் வேலை இருந்தா கொடுங்க சாமி செய்றேன்

குர : சரிதான் போ எனக்கே வேலை இல்லாத் திண்டாட்டம் ஏம்பா நீ உண்மையிலேயே பரதேசிதானா, இல்லே

பழ: என்ன சாமி அப்படிக் கேட்டீங்க

குர: இல்லேப்பா இந்தக் காலத்திலே வேஷம் அதிகமாப் போச்சு அசல் எது போலி எதுன்னு தெரிஞ்கிறதே கஷ்டமா இருக்கு யாரையும் நம்ப முடியலே தாடியை வளர்த்துக் காவியைப் போட்டுட்டு பரதேசின்னு புறப்பட்டுடருங்க

பழ: சாமி என்னைப் பார்த்தா அப்படியா தோணுது

குர: இல்லை இருந்தாலும் சந்தேகம் ஆமா உனக்கு பிச்சைதானே வேணும்

பழ: ஆமாம் சாமி

குர: அதோ பார் மாமரத்து வீடு அங்கே போ பெரிய மிராசுதார் அங்கே போனு நிறைய கிடைக்கும்

பழ: வழிகாட்டி அதையாவது சொன்னீங்களே தர்மப்பிரபு

[சற்று தாமதம்]

பழ: அம்மா மகாலட்சுமி

மிரா: [உள்ளிருந்துகொண்டே] மகாலட்சுமி கூப்பிட்றது யாருன்னு போய்ப்பார்

மகா: [வந்துகொண்டே] யாரது?

பழ: பரதேசி, தாயே பிச்சைக்காகக் கூப்பிட்டேன்

மகா: என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்

பழ: பேரு தெரியாதும்மா. பிச்சைக் கேட்கத்தான் இபபடியெல்லாம் கூப்பிட்றது.

மிரா: [உள்ளிருந்தே] மகாலட்சுமி-யார் வந்தது.

மகா: யாருமில்லேப்பா. ஒரு பரதேசி.

மிரா: பொழுது விடிஞ்சா ஊர்வலம் புறப்பட்டுடருனுங்க ஒரே தொல்லையாப் போச்சு. எதையோ போட்டு விரட்டு.

மகா: சரிப்பா. நீ ஏன் பிச்சை எடுக்கிறே? ஏதாவது வேலைசெய்தா வேண்டிய சாப்பாடு கிடைக்குமே.

பழ: பிச்சைக்காரனுக்கு யாரும்மா வேலை கொடுப்பாங்க.

மகா: அப்படின்னு பிச்சை எடுத்துத் தான் பிழைக்கணுமா,

பழ: வேற கதி இல்லைங்க.

மகா: உம் பேரு என்ன.

பழ: பழநி ஆண்டி.

மகா: இந்த ஊரிலே ரொம்ப நாளா இருக்கியா.

பழ: வந்து ரெண்டு நாளாவுது. அலைஞ்சு அலைஞ்சு பார்க்கிறேன். ஏதும் கிடைக்கலே. எங்கே போய்க் கேட்டாலும் இல்லை இல்லைன்னு சொல்லி விரட்டுருங்க. பசிக்கொடுமை தாங்க முடியலை.

மகா: ஐயோ பாவம்.

பழ: நேரமாணு கூட்டம் சேர்ந்திடும்னு காலையிலே புறப்பட்டுட்டேன். நீதான் தாயே இந்த ஏழைக்குப் பசி தீர்க்கணும்.

மகா: கொஞ்சம் இரு. இந்தா பழைய சாதம்—நாளைக்கும் வா.

பழ: நீ நல்லா இருக்கணும் தாயே. முருகன் உனக்கு எல்லா அருளும் புரிவார்.

[காட்சி மாற்றம்] இசை

பர: என்ன சிவநேசரே நேற்று பிரமாதமா பேசினீர் பிறகு சொல்லாமகப் பிநிட்டிட்டீரே.

சிவ: அவசரகாரியம். வெளியூர்ப் பிரயாணம். புதுச்சாமி எங்கே.

பழ: [வந்து கொண்டே] இதோ வந்து கொண்டேயிருக்கேன்.

சிவ: முருகப்பர் போன காரியம் எப்படி

பழ: பட்ட கஷ்டத்துக்கு ஏதோ கொஞ்சம் பலன்.

பர: முதல் நாளே யாரய்யா இந்த ஊரிலே உமக்கு அள்ளிக் கொடுத்தது. நாங்களும் தினமும் தெருத்தெருவா அலையரோம் ஒரு பிடி அரிசி கிடைக்கிற பாடில்லை.

சிவ: அரிசி விற்கிற விலையிலே உமக்குளப்படிக்கொடுப்பாங்க. நாம்ப சேர்த்து வைச்சிருக்கிறதையே வாங்கருங்க.

பர: அதிருக்கட்டும் முருகப்பருக்கு என்ன கிடைச்சுது எங்கே கிடைச்சுது சொல்லும்.

பழ: இன்னைய பொழுதுக்கு ஏதோ கிடைச்சுது. அதுவும் ஒரே இடத்தில்.

பர: அது எந்த இடம் எனக்குத் தெரியாத இடம். நானும் இந்த ஊரிலே வருஷக்கணக்கா இருக்கேன்.

பழ: மாமரத்து வீடு மிராசுதார் வீடுன்னு சொன்னுங்க.

பர: மிராசுதாரா? மகா கஞ்சனுச்சே பைசா கொடுக்கமாட்டானே.

பழ: அவரு கொடுக்கல்லே. அவரு பொன்னு தங்கமான குணம் பெரிய மனசு பரிதாபப்பட்டு அன்போடு இருந்த சாதத்தையெல்லாம் அள்ளிக் கொடுத்துடுச்சு. முருகன் அருள்.

சிவ: என்ன பரமானந்தரே புதுச் சாமிக்கு அடிச்ச அதிர்ஷ்டத்தைப்பாரும். நாமளும் இருக்கோம். வெறும் காவடிகள்.

பர: இருக்கட்டும் நானும் நாளைக்கு அந்த வீட்டுக்கே போய்ப் பார்க்கிறேன்.

சிவ: வீட்டைப் போய் பார்த்துட்டு வாரும்.

பர: இல்லே இங்கேயே உக்கார்ந்திருந்தா நம்மளைத் தேடிக் கொண்டுவந்து வந்து கொடுப்பாங்க.

சிவ: நம்மைத் தேடியும் வரவேண்டாம். நாம் தேடியும் போக வேண்டாம். கேட்டபோது கிடைப்பதற்கு வழி செய்யலாமே.

பிர: அப்படி என்ன வழி பிரமாத மான வழி.

சிவ: அதுதான் நமது நெடுங்கால திட்டம். திகைக்கவேண்டாம்

பழ: நீங்க சொல்லும்போதே திகைப்பாவே இருக்கு

சிவ: பிச்சைக்காரர்களை எல்லாம் ஒன்றுசேர்க்கும் திட்டம்

பர: இல்லை கூண்டோடு கைலாசம் அனுப்பும் திட்டம்

சிவ: இது நமக்குத் தேவையான திட்டம் திட்டத்தின் முதல்படி பரதேசிகள் சங்கம்

பழ: பரதேசி சங்கமா

பர: பரதேசிகளுக்குப்பங்கம்

சிவ: எல்லோருக்கும் சங்கம் இருக்கும்போது நமக்கு மாத்திரம் கூடாதா? தொழிலாளர் சங்கம், முதலாளிகள் சங்கம், இளைஞர் சங்கம், முதியோர் சங்கம், பணக்காரர் சங்கம், ஏழைகள் சங்கம், விற்பவர் சங்கம், வாங்குபவர் சங்கம் இப்படி ஒவ்வொருவர் நன்மைக்கு சங்கம் இருக்கும்போது நமக்கு ஏன்வேண்டாம் ஆடுமாடுகளைப் பாதுகாக்கக் கூட சங்கம் இருக்க மனிதர்களைப் பாதுகாக்க ஒரு சங்கம் கூடாதா?

பர: சங்கத்துக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்

சிவ: சங்கத்தில் பண்டாரம் பரதேசிகள் எல்லாரையும் அங்கத்தினராக்கணும் ஒண்ணு சேரணும்

பழ: இது நடக்காத காரியம்

சிவ: உம்மைபோலிருந்தால் சங்கம் நடக்காது உட்கார்ந்திடும் தைரியம் வேணும் ஒன்று சேர்ந்தால் மட்டும் போதாது

பர: இனி ஒருவரும் பிச்சை எடுக்கக் கூடாதுன்னு ஒரு முடிவும் செய்யணும்.

சிவ: இல்லை பிச்சை எடுப்பது ஆண்டிகளின் பிறப்புரிமை அதைவிட்டுக் கொடுப்பது மடமை

பர: நமக்கேது வேறு உரிமை

சிவ: தினமும் நமக்கு ஒழுங்காக பிச்சை கிடைக்கும் வழி செய்வோம். ஒவ்வொருத்தரும் தனித்தனியாகப் போனால் அடித்து விரட்டுகிறார்கள். எல்லோரும் மொத்தமாகச் சேர்ந்து போய் குறிப்பிட்ட ஹோட்டல்கள், ஹாஸ்டல்கள் மேல் படை எடுக்கணும்.

பழ: நமக்கு அங்கே சாப்பாடு தயாரா இருக்கும், வயிற்றுக்கு வேண்டியது முதுகிலே கொடுப்பாங்க

சிவ: கொடுத்தால் சும்மா விடமாட்டோம் உடனே அங்கேயே சத்தியாக்கிரகம்

பர: அப்புறம் உண்ணாவிரதம்

பழ: அதுதான் எப்பவும் இருக்கோமே சாமி இந்தத்தொல்லை எல்லாம் நமக்கெதுக்கு

சிவ: இப்படி நினைக்கிறதனாலேதான் நாம் தொல்லை அனுபவிக்கிறோம். ஒற்றுமையோடு உறுதியோடு போராடினா தொல்லைகளுக்குப்பயந்து தொலையட்டுமென்று கொடுத்து விடுவார்கள்.

பர: கொடுக்கிறதை வாங்க இந்த உடம்பிலே தெம்பு இல்லை சாமி

பழ: எதுக்குச்சாமி இந்த வீண் யோசனை ஆதியிலிருந்தே பெரிய பெரிய மகான்களெல்லாம் பிச்சை எடுத்து பிழைச்சிருக்காங்க ஏதோ கிடைச்சதை கொண்டு காலந்தள்ளாம சங்கமும் சத்தியாக்கிரகமும் உலகத்திலே நல்லவங்க இருக்கிறவரைக்கும் நம்ம தொழிலுக்கு ஆபத்தில்லை.

சிவ: எல்லாத்தொழிலும் பெரிய மாற்றம் நம்ம தொழிலிலே மட்டும் ஏமாற்றம் இதற்கு நாமே காரணம் இன்னும் கஷ்டப் படுங்கள் தெரியும் நான் வரேன்

(தாமதம்) காட்சி மாற்றம் (இசை)

பழ: அம்மா தாயே தருமம் தாயே

(பாடுகிறான்)

தருமம் தலைகாக்கும் நல்ல
தருமம் தலைகாக்கும் நல்ல
தருமம் செய்தால் கருமம்
தொலையும்
தருமம் தலைகாக்கும் — நல்ல
தருமம் தலைகாக்கும்

மகா: அது உன்னையும் காக்கும்

பழ: ஆமாம் தாயே அது உலகத்தையே காக்கும்

(பாட்டு)

ஊருஞ் சதமல்ல உற்றாருஞ் சதமல்ல
நீரும் சதமல்ல நிலமும் சதமல்ல
பேரும் புகழும் பின் தங்கி நிற்க
யாரும் போற்றும் ஈகை எதும்
நல்லறமே
தருமம் இல்லைன்னா உலகமே
அழிந்துவிடும்.

மகா நல்லா பாட்டுபாடறயே.

பழ: ஆண்டிகள் பிழைப்புக்கு அது ஆயுதம் தாயே

(நாட்டுப்பாடல் மெட்டு)

பாடுபட்டுத் தேடி பணத்தைப்
புதைத்து வைத்து
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்
கூடுவிட்டிங்கு ஆவிதான் போயின
பின்
யாரே அனுபவிப்பார் பாவிகாள்
அந்தப் பணம்

மிரா: (வந்துகொண்டே) நீ அனுபவிக்கலாமே உன்னைமாதிரி வருகிற தடியன்களுக்கெல்லாம் கொடுத்துட்டு நாங்களும் தெருவிலே அலையணுமா

பழ: இல்லை பிரபு கொடுத்தால் குறைந்துவிடாது நிறையும்

மிரா: பெரிய தீர்க்கதரிசி சொன்னா சொன்னபடி நடக்கும் ஆண்டிப் பயலெல்லாம் அட்வைஸ் பண்ண வந்துட்டானுங்க

மகா: அப்பா பாவம் கோவிக்காதீங்கப்பா

பழ: ஐயா மகாலட்சுமியான இந்த செல்வத்தைப் பெற்ற உங்களுக்கு ஒரு குறைவும் ஏற்படாது.

மிரா: ஆண்டியின் ஆசீர்வாதம் ஒண்ணுதான் பாக்கி போடா போக்கில்லாதவனே

பழ: ஐயா நான் ஆண்டிதான் ஆனாலும் நல்லதைச் சொல்வதுகூட குற்றமா

மகா: ஏம்பா எரிஞ்சு விழறீங்க

மிரா: நீ சும்மா இரு உனக்கு ஒண்ணும் தெரியாது இப்படி வேஷம் போட்டு பிச்சை எடுத்து பெரிய பெரிய பங்களாக்கட்டிப்புடறானுங்க தெரியுமா

மகா: பழநிஆண்டி அப்படியில்லேப்பா

பழ: ஆமாம் தாயே கையில் ஒரு பைசாகிடையாது நேற்று சாப்பிட்டது. பசியைப்போக்க இந்த ஏழைக்கு இரங்க யாரிருக்கா

மகா: இரு நான் சாப்பாடு கொண்டு வரேன்

(தொடரும்)

THE ART OF GOVERNMENT

—[KODUMUDI RAJAGOPALAN]—

(Continued from last issue)

This is not only against the trend of social evolution; in calling themselves a third force or party in politics they are only weakening their political strength. The result is that pseudo-democratic capitalists draw sustenance from them only to join the extreme Rightists or on the other hand, the violent revolutionary parties which incite the working classes to violent revolutions get strengthened in their attempt to establish a capitalist dictatorship.

Apart from this, we have those who advocate Sarvodhaya, those who advocate Peace at any price; and anarchists. The first group wants a single Sarvodhaya rule for the whole world which is free from caste and religious differences, which eschews violence and which is based on non - violence. The path they show completely lacks political insight. The defects and evils in our social order in the present scientific era cannot be removed by non - violence or by a politically weak central government. Peace - lovers more or less follow the Sarvodhaya advocates. Both oppose war, capitalist exploitation and social divisions. This is supported by all true democrats.

As for the anarchists, the least said about them the better. They think that society needs no restrictions and that it has the powers of natural growth. While we believe that the safety and necessity of democracy lies in rectifying the people's ways as society becomes broad - based.

The foundation of society is mutual co-operation between man and man. If we do not believe each other, how can mutual respect for each other flourish? Since we do not pay heed to this truth and because we create differences and encourage selfishness, various parties have come into our midst. Thus these parties are our creation. Mutual respect and integrity are the basic virtues. Though for the moment they may appear to have been forgotten, they are not really so. If party fanaticism does not catch us, our progress is sure and certain.

12. CIVIC CONSCIOUSNESS

Various solutions are offered to tackle anti - social forces. There is really only one solution, namely, that the people should behave with civic consciousness. When the people think it their social duty to prevent wrong doing, when they exercise their rights in unity to prevent wrong doing, then only can the anti - social forces be left in check.

The people must exercise their franchise in right spirit and by persuasion remove evil rulers. If they act in unity and co-operation, this will be easy. If the rulers consider such true expressions of the people's will a challenge to them, they are not good rulers. If the rulers are well - veresed in the act of government, they would rather welcome such moves by the people. But the people should not construe this as an invitation to lead a life of licence, for liberty is not licence.

If the people are to discharge their obligations to society, this civic consciousness must burn in them always. Good government will not descend on them like manna from heaven if they throw the blame on the rulers and go on doing evil or if they witness wrong - doing with utter indifference and complacency or if they just pray for good government.

Whether agriculturists, merchants, office employees, workers all must have the feeling of civic consciousness and obligations. Then only will government flourish as an art and peace and prosperity reign on earth.

Man's greed is the real cause of the modern crisis and ferment. It can be removed only by social or civic consciousness.

What to do with corruption - the bribe taker or the bribe giver? What to do with the black marketeer who trades on the people's sufferings (arising out of shortage of essentials)? How to overcome the anti - social forces that are engaged in illicit distillation? How to make integrity and good conduct flourish in the day to day administration and the daily lives of the people?

Will not good government dawn on us if the evil forces are tackled? Yes, but how to tackle them? We need not pay heed to those cowards who think it is impossible to destroy the anti — social forces. Because evil will ever be with us, it is silly to suggest we should never combat evil.

In marshalling our forces against anti-social tendencies we should be helpful to the forces of government. In the campaign against corruption — against the bribe taker as well as the bribe giver, each sheet must be organised not for mere demonstration but for reflecting the popular will. The corrupt practices of the officials must be publicized so that the public maybe warned against them. In important places, a list of corrupt

officials should be prominently displayed

It is not difficult to destroy Black Market. If the employees of the black marketeers are imbued with social consciousness, Black Market will go once and for all. Yes, workers, who shout down capitalism in the Maidan, do you realize it is you and you alone, your arms and brains that help the black marketeer. You refuse to do the dirty job of black marketing. If this can be done for a week and if the black market is boycotted will not the people's enemies be destroyed?

Anti-social illicit distillers of arrack flourish because we let them do so, either out of fear, or out of indifference or out of ourselves being accessories. If each of us become a honorary constable will there be illicit distillation. There is no use in saying that the ordinary policeman abets this crime. If we intensify the campaign, the forces of law and order will be strengthened.

Such discharge of our social obligations imply that social workers willing to bear suffering for social good should come forward. Unless the rulers and the ruled join in the fight, good government is an impossibility. Under such circumstances all our much vaunted planning will be of no avail. Every one must live without fear must live with equal opportunities and in freedom. Only when this democratic tradition is strictly followed will be people live with full civic consciousness.

Such consciousness on the part of the people enables the rulers to administer the government as an artistic creation. It enables also the people to merge material comforts with spiritual exaltation. True democracy ensures for the people godliness both in thought and action.

CONCLUSION

In the above twelve chapters, I have explained clearly though briefly the high political ideals embodied in the democratic approach to life's problems. On the one hand, I have stressed the duties and responsibilities and the qualifications of those who govern us; on the other hand I have stressed the rights of the people, the need for economic equality the need to eschew political and party passions in the formulation of National Planning. A balanced outlook on all these problems will render government an art.

We must live That is our main problem. But mere living is not enough. We must live well. We can do that only if our daily individual and national lives are embedded in the democratic approach. So, I stress once again this. Let us not pollute the foundations of democracy with politics based on hatred. Hatred is violence. Even a tinge of violence is undemocratic. So, I warn all true democrats to be careful and use democratic means to achieve democratic ends.

THE END

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஐந்தாறு பேர்களாக வந்தவர்களில் வைணவர் ஒருவர். சைவர் மற்றொருவர். அவர்களைச் சார்ந்து கிறித்துவர் இருவர். இவர்களுக்கெல்லாம் பின்னால் ஒரு மகம்மதியர் வந்தார்.

“உங்கள் வழக்கு என்ன ஆயிற்று? ரங்கநாதருக்கு உரியது தென்கலையா அல்லது வடகலையா? ஏதோ தென்கலையார்கள் வெற்றி பெற்றார்கள் என்று கேள்விப்பட்டேனே உண்மைதானா?” என்று சைவர் வைணவரைப் பார்த்துக் கேட்டார்.

“ஆமாம், தென்கலையார்கள் தான் வெற்றி பெற்றார்கள். ஆனாலும் வடகலையார்கள் முழுதும் தோற்றுப் போய்விடவில்லை. கோயிலில் அவர்களுக்கும் சிறிது உரிமையுண்டு” என்றார் வைணவர். அதுகேட்ட கிறித்துவர், “இதெல்லாம் பொருளற்ற பூசல்கள்! பரமண்டலத்திலிருக்கும் எங்கள் பரமபிதா ஒருவரே தெய்வம்” என்றார். அதைக்கேட்ட மகம்மதியர் ஓர் ஏளனச் சிரிப்புச் சிரிக்கவே, வைணவரும், சைவரும் அச்சிரிப்பில் கலந்து கொண்டனர். கிறித்துவ நண்பருக்கு முகம் சுண்டி விட்டது. சற்று நேரத்தில் எல்லோரும் கீழே இறங்க ஆரம்பித்தனர்.

இப்போது தாயுமான அடிகள், இவர்கள் அத்தனைபேரின் அறியாமையைக் கண்டு சிரிக்கலானார். “முன்பு கண்ட மதுரையார், காளத்தியார்களைக் காட்டிலும் இவர்கள் தமது முழு அறியாமையைக் காட்டினர்.” என்று எண்ணியவாறே கவிதையைத் தொடர்ந்தார்.

......“மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோடிக
ளெலாம்
தந்தெய்வம் எந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிட
வும் நின்றதெது?
எங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி
யின்பமாய்
என்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள
தெதுஅது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாம்மோன
உருவெளிய தாகவும்
கருதியஞ்சலி செய்குவோம்”

பாடல் முற்றுப்பெற்றது. தாயுமான அடிகளின் உள்ளம் நிறைவு பெற்றது. ஆம் இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் இக்கவிதையின் பொருளை உலகம் உணரும் என்ற நம்பிக்கை உதயமாயிற்று அவருக்கு. இன்று அவர் கண்ட கனவு நனவாகி வருவதைக் காண்கிறோம். வாழ்க தாயுமான அடிகளின் கவிதை. வாழ்க அவர் புகழ்

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor: T. L. Panchapakesan.